செய்தி வெளியீடு எண்:362 நாள் : 19.07.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.7.2016) தலைமைச் செயலகத்தில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் மற்றும் மறுவாழ்விற்காக சேவை ஆற்றி வரும் அரசு மனநல மருத்துவ நிலையத்தின் முன்னாள் தலைவரும், SCARF (Schizophrenia Care and Research Foundation) தொண்டு நிறுவனத்தின் நிறுவனர்-ஆலோசகருமான டாக்டர் எம். சாரதா மேனன் அவர்களுக்கு 2016-ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதினை வழங்கினார்கள்.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில், ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு அந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ‘‘அவ்வையார் விருது” எனும் உயரிய விருது வழங்கப்படும் என்றும், இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி 2012–ஆம் ஆண்டு முதல் “அவ்வையார் விருது” மகளிர் தினத்தையொட்டி வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம். சாரதா மேனன் அவர்கள் 3 வருடம் பயில வேண்டிய மனோதத்துவ நிபுணர் படிப்பை 2 வருடங்களில் சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் முடித்து, சென்னை மருத்துவக் கல்லூரியில் முதுகலைப் பட்டம் (M.D.) பெற்றுள்ளார். டாக்டர் எம். சாரதா மேனன் அவர்கள் நாட்டிலேயே முதல் பெண் மனநல மருத்துவரும், பத்ம பூஷண் விருது உட்பட பல விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். 1961–ஆம் ஆண்டு சென்னை இன்ஸ்ட்டியூட் ஆப் மென்டல் ஹெல்த்தில் முதல் பெண் கண்காணிப்பாளராக பணியில் சேர்ந்து, அவரது தலைமையில் மருத்துவமனையின் ஆய்வுக் கூடம், கட்டட அமைப்புகளை மேம்படுத்தி Occupation Therapy Unit-யை சீர்செய்து நோயாளிகளுக்கு புதிய தொழிற்பயிற்சி அளித்துள்ளார். மேலும், அவர் நோயாளிகளுக்கு ஆண்டுதோறும் விளையாட்டு தினம் நடத்தியதோடு, மனநோயாளிகள் செய்யும் கைவினைப் பொருட்களை கண்காட்சியில் வைத்து, அதன்மூலம் மருத்துவமனைக்கு நிதி திரட்டியுள்ளார்.

மனநோயாளிகளின் நல்வாழ்விற்காக 1984–ஆம் ஆண்டு SCARF என்ற தொண்டு நிறுவனத்தை டாக்டர் எம். சாரதா மேனன் அவர்கள் துவக்கி, மனநோயாளிகளுக்கு தற்காலிக தங்கும் இடவசதி, மேம்படுத்தப்பட்ட மனநல சிகிச்சை முறைகள், வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி அளித்து வருகிறார். 2016–ஆம் ஆண்டுக்கான அவ்வையார் விருதுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் எம். சாரதா மேனன் அவர்களுக்கு அவரது சிறந்த சமூக சேவையினை பாராட்டி அவ்வையார் விருது வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசால் 2.3.2016 அன்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மனநல மருத்துவர் டாக்டர் சாரதா மேனன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் அவ்வையார் விருதுக்கான ஒரு லட்சம் ரூபாய் காசோலை, 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "We are honoured by your accepting this award. I am very happy to support you and hope that the Almighty may bless you with many more years of good health and service to the people." என்று வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து அவ்வையார் விருதினை பெற்றுக் கொண்ட டாக்டர் சாரதா மேனன் அவர்கள் தனது சமூக சேவையினை அங்கீகரித்து விருது வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

அப்போது டாக்டர் சாரதா மேனன் அவர்கள்,

"Dear and Respected Madam,

Warm and pleasant greetings and the best of wishes to you and all that you desire and work for, to happen.

I am beholden to you and deeply grateful for having considered me for the prestigious award – the Avvaiyar Award, from the State of Tamil Nadu. I will try to live up to your expectation in the short time available.

You have always been very sympathetic supportive and helpful regarding all services rendered to the mentally ill / disabled. I remember in 1995 you offered all the support to help SCARF INDIA, which has grown so well, and your announcement of equal opportunities for the mentally disabled as is offered to other disabled persons. Since then many privileges and concessions have been offered to this unfortunate section of society. Your magnanimity, concern and compassion are the sources of hope for a better future for the mentally ill – for the patients, family, service provider and society in general.

May the dear lord bless you with long years of health in abundance, peace, wisdom and prosperity. Thank you, Madam." என்று நன்றி தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை ஆணையர் திரு. வி.எம். சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*** * * * * * ***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 19.7.2016**